The Hindu (English)
Dated: 24.02.2024

# Parliamentary elections: CEC, EC hold meeting with parties

**Various political parties insisted on deployment of paramilitary forces and installation of cameras in polling booths. Requests were made for posting additional personnel at sensitive booths**

**The Hindu Bureau**
CHENNAI



Chief Election Commissioner Rajiv Kumar and Election Commissioner Arun Goel holding a meeting with political parties. Chief Electoral Officer Satyabrata Sahoo is also seen. SPECIAL ARRANGEMENT

Ahead of the Parliamentary elections, Chief Election Commissioner (CEC) Rajiv Kumar and Election Commissioner (EC) Arun Goel chaired a meeting with 10 political parties in Chennai on Friday.

They also reviewed the preparedness for general elections to the Lok Sabha. Chief Electoral Officer Satyabrata Sahoo was also present.

Speaking to reporters after the meeting with the CEC and EC, DMK's R.S. Bharathi said his party objected to what it called a new system in which the vote cast on the ballot has to go to the control unit only after it crossed the voter verifiable paper audit trail (VVPAT) unit.

"This is illegal," he said. If the vote cast goes directly to the control unit, it would help in transparency, Mr. Bharathi said and contended: "To say that the VVPAT would not be open for access during the counting process is creating doubts. The Election Commission itself is accepting that there is a chance for 1%-2% error with this."

Arguing that there was a "chance for tampering it", Mr. Bharathi said people would have doubts as to whether there were any "ulterior motive" behind this.

He said they did not get satisfactory answers.

AIADMK's D. Jayakumar said that the State police was "mostly acting in favour of the ruling party". Despite having flagged this issue on several occasions, there was "no use", he said, and further urged the Election Commission to deploy personnel of the Central police and paramilitary forces for the election work.

Names of dead people were still in the electoral rolls, while names of several eligible people were not included, he charged, and said that sensitive polling booths should be identified and additional personnel should be deployed there along with cameras installed in the boothsthem.

BJP's Karate Thiagarajan said that his party insisted that cameras be are installed in all polling booths and adequate paramilitary personnel be deployed in sensitive polling booths. Star campaigners should be given permission without any delay, he said.

Congress' K. Chandramohan said that his party favoured one-phase election in Tamil Nadu and that transparency should be maintained while conducting elections.

**DMK's R.S. Bharathi said his party objected to what it called a new system in which the vote cast on the ballot has to go to the control unit only after it crossed the voter verifiable paper audit trail unit**

He also said that basic amenities should be ensured in polling booths.

### Single-phase elections

DMDK's B. Parthasarathy said his party insisted on holding single-phase elections and further recalled that his party has been demanding the linking of Aadhaar card with the EPIC card in all the constituencies.

He said paramilitary personnel should be deployed.

CPI's Veerapandian recalled the recent incidents in Delhi and Chandigarh, which he contended were shocking and a dent on the image of the Commission and urged that such incidents should not be allowed.

He said permission should not be granted for using places of worship for election campaigning.

His party supported one-phase election, he said.

CPI (M)'s Sampath and Arumuga Nayinar represented their party in the meeting.

They said that the Commission should involve officials with integrity in election-related work.

They also underlined the importance of transparency in the elections.

Representatives from Aam Aadmi Party and Bahujan Samaj Party also took part in the meeting and expressed their opinion. In the afternoon, District Collectors/District Election Officers, Returning Officers and senior police officers also participated in the meeting with officials of the Commission.

Deccan Chronicle
Dated: 24.02.2024



# Chief Election Commissioner meets officers

DC CORRESPONDENT
CHENNAI, FEB 23

A team of top level officers of the Election Commission of India (ECI), led by Chief Election Commissioner Rajiv Kumar, met officers who would be involved in the conduct of the Lok Sabha elections to review their preparedness to hold the polls on Friday in Chennai.

Rajiv Kumar, Election Commissioner Arun Goel and other officials from the ECI arrived in Chennai on Thursday on a two-day visit to meet political party representatives and the officials. Several political party leaders presented memoranda to the ECI on the occasion with most of them stressing on the need to do away with the Electronic Voting Machine (EVM) system.

DMK leaders, organization secretary R S Bharathi and legal wing secretary N R Elango, MP, submitted a memorandum explaining how the EVM system went against the norms. They wanted the VVPAT system to be made compulsory and also to count the votes of all the slips generated by the VVPAT.

CPI State secretary R Mutharasan wanted the election to be held on a single day in the State. He too was against EVMs and insisted on VVPAT.

Apart from the State Electoral Officer, Sathyabrata Sahoo, top police officers like Commissioners, IGs and DIGs participated in the discussions, along with district collectors, who are the district election officers, and returning officers.

The Times of India
Dated: 24.02.2024


# TN parties raise concerns, claim 'manipulation' in voting system

Times News Network

**Chennai:** Political parties in Tamil Nadu, particularly DMK and CPM on Friday raised concerns about the arrangement of electronic voting machines (EVMs) in the order of ballot unit, voter verifiable paper audit trail (VVPAT) and then control unit.

"VVPAT can be tampered with very easily," DMK organising secretary R S Bharathi said, after a meeting with chief election commissioner Rajiv Kumar and election commissioner Arun Goel in Chennai. In a 15-page memorandum, Bharathi urged the commission not to conduct elections with present arrangement. The manual of ECI, in present M3 machines, arranges the printer to be in the middle of the ballot unit and control unit. This paves way for output of the VVPAT to flow to the control unit and it opens up a myriad of technical possibilities to corrupt integrity of data that is fed to control unit from balloting unit, Bharathi said. He said the commission had not given any satisfactory response so far to concerns raised by DMK.

R Ramesh Shankar



**WILL BE LOOKED INTO:** (From left) Chief election commissioner Rajiv Kumar and election commissioner Arun Goel during the review meeting, in Chennai on Friday, of the preparedness for upcoming Lok Sabha elections

The commissioners are on a two-day visit to Chennai to review the poll preparedness with ten recognised state and national parties.

In his representation, CPM state secretary K Balakrishnan said introduction of VVPAT has added a crucial and unique vulnerability to the system of EVM voting. Noting there was strong discontent and doubts against EVMs, CPI state secretary R Mutharasan demanded that VVPAT slips be given to all voters after casting votes. The CPM, CPI and DMDK demanded that election must be single phase in Tamil Nadu.

Raising doubts about the integrity of the state police, AIADMK's D Jayakumar demanded that the commission deploy more Central forces for security during elections.

BJP leader Karate Thiagarajan demanded that all booths in the state should come under CCTV surveillance.

Dt. Next, Dated: 24.02.2024

# Parties don't want VVPATs between EVMs, control unit

**CHENNAI: Political parties in the state raised a cause of concern over the idea of sandwiching Voter Verifiable Paper Audit Trail (VVPAT) between Electronic Voting Machine (EVM) and Control Unit during the meeting with Chief Election Commissioner Rajiv Kumar on Friday here.**

The CEC was here to hold series of meetings with stakeholders on election preparedness for the Lok Sabha polls. The representatives of the Dravidian major and other political parties urged the CEC to deploy additional forces in sensitive booths and sanitise the voters' list to weed out duplicate entries and ensure eligible voters were not missed out.

Representatives of the DMK and its allies, Left parties, flagged the issue of placing VVPAT between the EVM and CU and echoed that it would introduce vulnerability and compromise the biggest defense of the sacrosanct nature of the EVM.

The Election Commission had admitted that placing VVPAT between EVM and CU would lead to 2 per cent error in voting, which would account for around 40,000 votes in each Parliamentary constituency. Using sequence would create an opportunity for tampering with the system. The authorities should refrain from such practice, said senior DMK leader and former member of Rajya Sabha RS Bharathi, who along with Rajya MP NR Elango, attended the meeting. They have submitted a petition regarding the issue to the CEC.


## 'Engage private firms to fix CCTVs'

Senior AIADMK leader and former minister D Jayakumar emphasised on stepping up security measures in sensitive booths and ensuring the upkeep of the footages of such booths. He also urged the CEC to engage private firms, which are politically neutral, in election works such as installing CCTVs in polling booths and counting centres. He also urged the CEC to guarantee no eligible voter was left out and double entries in the voters' list should be removed.

BJP functionary Karate Thiagarajan said that CCTVs should be installed in all the booths and demanded paramilitary force in sensitive booths. Elections should be conducted peacefully without law and order issue and the senior police officers, who were acting in favour of the ruling party in the state should be identified and advised to ensure free and fair polls.

Representatives of the Left parties insisted that the sequence of the voting process for issues of VVPATs must be in the order of Ballot Units-Control Unit and then the VVPAT receipt.

The EC should ensure "100 per cent VVPAT receipts are to be provided to all those who had voted," said CPM state Secretary K Balakrishnan. R Muthurasan of CPI said that there was a strong discontent and doubts. EVM votes should be verified by counting VVPATs.




**Chief Election Commissioner Rajiv Kumar with senior officials during a consultation meeting to review the poll preparedness for the forthcoming Lok Sabha elections in Chennai on Friday**

Daily Thanthi

Dated: 24-02-2024

நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம்

# சென்னையில் அரசியல் கட்சிகளுடன் தலைமை தேர்தல் கமிஷனர் ஆலோசனை

## தேர்தலை அமைதியாக நடத்துவது பற்றி கருத்துக்களை கேட்டறிந்தார்

**சென்னையில் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தலைமை தேர்தல் கமிஷனர் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது நாடாளுமன்ற தேர்தலை அமைதியாக நடத்துவது பற்றி அனைவரது கருத்துக்களையும் அவர் கேட்டறிந்தார்.**

சென்னை, பிப்.24-

நாடாளுமன்ற தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

### தேர்தல் முன்னேற்பாடு ஆய்வுக்கூட்டம்

இதையொட்டி நாடாளுமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை மாநில வாரியாக இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் தலைமையிலான குழு ஆய்வு செய்து வருகிறது.

அதன் அடிப்படையில் தமிழகத்திலும் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வு கூட்டம், சென்னை விமான நிலையம் அருகே உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் நேற்று தொடங்கியது.

முதல் நாளான நேற்று, தேர்தலை அமைதியாக நடத்துவது குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் கருத்துக்களை கேட்டார்.

அப்போது தேர்தல் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை தலைமை தேர்தல் கமிஷனரிடம் அரசியல் கட்சியினர் முன்வைத்தனர்.

பின்னர் அந்த கோரிக்கைகள் பற்றி நிருபர்களுக்கு அரசியல் கட்சி பிரதிநிதிகள் அளித்த பேட்டி வருமாறு:-

### முறைகேடுகளுக்கு வாய்ப்பு

தி.மு.க. (ஆர்.எஸ்.பாரதி, என்.ஆர்.இளங்கோ):- கடந்த

(2-ம் பக்கம் பார்க்க)

## தலைமை தேர்தல் கமிஷனர்...

1-ம் பக்க தொடர்ச்சி

தேர்தலில், மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்துக்கு அடுத்தபடியாக கட்டுப்பாட்டு எந்திரம் வைக்கப்பட்டு இருக்கும். அதன் பின்னர் வாக்குப்பதிவை உறுதி செய்யும் விவிபேட் எந்திரம் இருக்கும். ஆனால் இந்த முறை வாக்குப்பதிவு எந்திரத்துக்கு அடுத்ததாக விவிபேட் எந்திரத்தை வைக்கின்றனர்.

இதில் முறைகேடுகள் நடக்க வாய்ப்புள்ளது என்ற சந்தேகம் எழுகிறது. இது சட்டத்திற்கு புறம்பானது. பொதுமக்கள் அளிக்கிற வாக்கு நேரடியாக கட்டுப்பாட்டு எந்திரத்திற்கு போவதுதான் நம்பகத்தன்மையை உருவாக்கும். வாக்கு எண்ணும்போது விவிபேட்டில் உள்ள வாக்குகளை 100 சதவீதம் பார்க்க முடியாது என்றும் எண்ண முடியாது என்றும் சொல்வது சரியல்ல.




நாடாளுமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகளுடன் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் நேற்று ஆலோசனை நடத்திய போது எடுத்த படம்.

### எத்தனை கட்டங்களாக நடத்தினாலும் சந்திப்போம்

இதுபோன்ற வழிமுறைகளில் 1 முதல் 2 சதவீதம்வரை தவறு நடக்க வாய்ப்பு இருப்பதாக தேர்தல் கமிஷனே ஒப்புக்கொள்கிறது. ஒரு நாடாளுமன்ற தேர்தலுக்கு 2 சதவீதம் என்றால் 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வாக்குகள் வரும்.

ஒரு தொகுதியினுடைய முடிவை நிர்ணயிக்கும் அளவு அது. எனவே இதை மாற்றி அமைக்க வேண்டும். தலைமை தேர்தல் அதிகாரியிடம் கொடுக்கப்படுகிற மனுக்களை இந்திய தேர்தல் கமிஷனுக்கு அனுப்பிதான் அனுமதி பெறவேண்டும் என்றிருக்கும் நிலையை மாற்ற வேண்டும். கொடுக்கப்படுகிற புகார் மீது தலைமை தேர்தல் அதிகாரியே உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரம் அளிக்கவேண்டும். தேர்தலை எத்தனை கட்டங்களாக நடத்தினாலும் அதை சந்திக்க தி.மு.க. தயார்.

### வாக்காளர் பட்டியல் குழப்பம்

அ.தி.மு.க. (ஜெயக்குமார், இன்பதுரை):- தேர்தலை நியாயமாக, அமைதியாக, ஜனநாயக முறையில், விருப்பு வெறுப்பின்றி நடத்த வேண்டும். வாக்காளர் பட்டியலில் உள்ள முரண்பாடுகள் முழுமையாக களையப்பட வேண்டும். இறந்தவர்கள், வீடு மாறியவர்கள் பெயர் இன்னும் வாக்காளர் பட்டியலில் மாற்றப்படவில்லை. தகுதியுள்ளவர்கள் சேர்க்கப்படவில்லை. ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் பல வாக்குச்சாவடி மையங்களில் வாக்களிக்கும் நிலை உள்ளது.

தமிழ்நாட்டில் பதற்றமான வாக்குச்சாவடிகளை தேர்தல் கமிஷன் கண்டறிய வேண்டும். அந்த மையங்களில் கூடுதல் துணை ராணுவப் படை, சி.சி.டி.வி கேமரா நிறுவப்பட வேண்டும். ராதாபுரம் தொகுதியில் 2016-ம் ஆண்டு நடந்த தேர்தல் தொடர்பான வழக்கில் நீதிபதி கேட்டபோது, சி.சி.டி.வி கேமரா பதிவுகள் அழிந்துவிட்டதாக தேர்தல் கமிஷன் கூறியது. இந்த நிலை இருக்கக்கூடாது.

### துணை ராணுவப்படை

தேர்தலை சுதந்திரமாக நடத்துவதை உறுதி செய்ய வேண்டும். உள்ளூர் காவல்துறை, ஆளுங்கட்சிக்கு சாதகமாக உள்ளதால், வாக்குச்சாவடிகளுக்கு துணை ராணுவ வீரர்களை அதிகளவில் நியமிக்க வேண்டும்.

அனைத்து மாவட்டங்களிலும் தேர்தலுக்கு முன் கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டு முதல் கீழ்நிலை வரை அதிகாரிகளை மாற்றம் வேண்டும். சிறையில் உள்ள குற்றவாளிகளால் சட்டம்-ஒழுங்கு பாதிக்கும் நிலை உள்ளது. அவர்களை கண்டறிந்து, கண்காணிப்பில் வைத்து நியாயமான தேர்தல் நடத்த வேண்டும். கடுமையான கோடை காலத்தில் தேர்தல் நடைபெறுவதால், வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர் வசதி, நிழற்பந்தல் நிறுவ வேண்டும். தேர்தல் பார்வையாளர்களாக வெளிமாநில அலுவலர்களை பயன்படுத்த வேண்டும்.

### ஒப்புகைச் சீட்டு

தமிழக பா.ஜனதா (முன்னாள் டி.ஜி.பி. பாலச்சந்திரன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன்):- தமிழ்நாட்டில் இருக்கும் 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளும் முக்கியமானவை என்பதால், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டும். அனைத்து வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் மையங்களிலும் சி.சி.டி.வி. கேமரா பொருத்த வேண்டும். ஆளும் கட்சி தலையீட்டினால் கேமராவிற்கான டெண்டர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தகுந்த துணை ராணுவ படைகளை நிறுத்த வேண்டும்.

நட்சத்திர பேச்சாளர்களுக்கு விரைவில் அனுமதி வழங்க வேண்டும். ஆளுங்கட்சிக்கு சாதகமாக உயர் போலீஸ் அதிகாரிகள் இருந்தால், தகுந்த அறிவுரை வழங்க வேண்டும். கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை சார்பில் இந்திய தேர்தல் கமிஷனுக்கு அதுதொடர்பான கடிதத்தை வழங்கி இருக்கிறோம்.

தமிழக காங்கிரஸ் (நவாஸ், சந்திரமோகன்):- வாக்களித்த பின்னர் வாக்காளர்களுக்கு ஒப்புகைசீட்டை தர வேண்டும். வாக்காளர் அடையாள அட்டை அட்டையுடன் வாக்களிக்கச் சென்றால், பட்டியலில் பெயர் இல்லை என்று கூறி விடுகிறார்கள். இதனால் வாக்களிக்க முடியவில்லை. பெயர் இருந்தாலும், இல்லையென்றாலும் வாக்காளர் அட்டை இருந்தால் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

ஒரு மாதத்திற்குள் இந்தியா முழுவதும் தேர்தல் நடத்தி முடிக்க வேண்டும். தேர்தல் முடிந்து 60 நாட்களுக்கு மேல் முடிவுக்காக காத்திருக்க வைக்கக்கூடாது.

### ஒரே கட்ட தேர்தல்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (வீரபாண்டியன், ரவீந்திரநாத்) :- தேர்தல் வெளிப்படைத்தன்மையோடு அச்சம் இல்லாமல் நடக்க வேண்டும். சண்டிகர், டெல்லியில் நடைபெற்ற தேர்தல் முறைகேடுகள், நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கின. இந்திய ஜனநாயகத்தின் மீதும், தேர்தல் கமிஷன் மீதும் நம்பிக்கை இழக்க செய்துவிட்டது. அதுபோல் நாடாளுமன்ற தேர்தல் இருந்துவிடக்கூடாது. பதற்றமான இடங்களில் பாதுகாப்பு அதிகப்படுத்த வேண்டும். கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகளை தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடாது. பிரசாரத்தில் சாதி, மத இன உணர்வுகளை தூண்டுவதை தடை செய்ய வேண்டும். டாக்டர்களுக்கும் தபால் வாக்கு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரே நாடு ஒரே தேர்தல் கூடாது. தமிழகம் முழுவதும் ஒரே நாளில் தேர்தலை நடத்த வேண்டும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சம்பத், ஆறுமுகநயினார்) :- தமிழகத்தில் ஒரே நாளில் தேர்தல் நடத்த வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் நிறைய சந்தேகம் இருப்பதாக கூறியுள்ளோம். வாக்குப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு எந்திரம், விவிபேட் என்ற வரிசையில் வைக்க வேண்டும். யாருக்கு வாக்களித்தோம் என்பதற்கான விவிபேட் ஒப்புகை சீட்டை வாக்காளர்களுக்கு வழங்க வேண்டும். பணப்பட்டுவாடாவை தடுக்க வேண்டும்.

### கைரேகை பதிவு

தே.மு.தி.க. (பார்த்தசாரதி, ஜனார்த்தனன்):- ஒரே கட்டமாக தேர்தல் நடத்த வேண்டும். வாக்காளர் அடையாள அட்டையில் ஆதார் எண்ணை இணைக்கும் பணியை விரைவில் முடிக்க வேண்டும். யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்ய விவிபேட் ஒப்புகைசீட்டை வழங்க வேண்டும். ஆதார் அட்டைக்கு கைரேகை மாதிரி, வாக்காளர் அடையாள அட்டைக்கும் கைரேகையை பதிவு செய்யும் முறையை கொண்டு வர வேண்டும். கள்ள ஓட்டு போடுவதை தடுக்க வேண்டும். தேர்தல் கூட்டணி குறித்து இதுவரை யாரிடமும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. எங்களையும் யாரும் அழைக்கவில்லை.

பகுஜன் சமாஜ் கட்சி (சத்யமூர்த்தி):- முன்புபோல் வாக்காளர் சீட்டு நடைமுறையை கொண்டு வர வேண்டும். வளர்ந்த நாடுகளில்கூட மின்னணு வாக்கு எந்திரத்தை பயன்படுத்துவதில்லை. அதில் நம்பிக்கை குறைகிறது. வெறுப்பு அரசியல்முறையை தடுக்க வேண்டும்.

ஆம்ஆத்மி (ஜோசப்ராஜா, க்ளெட்வா மேரி):- கல்லூரி மாணவர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு அவர்கள் கூறினர்.

### இன்றும் நடைபெறுகிறது

இன்று காலை (சனிக்கிழமை) கல்வித்துறை, அமலாக்கத்துறை உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளிடமும், மாலை தமிழக தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, டி.ஜி.பி. சங்கர் ஜிவால் ஆகியோரிடமும் தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் ஆலோசனை நடத்துகிறார்.



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமாரை சந்தித்து ஆலோசனை நடத்திவிட்டு வந்த காட்சி.

The Hon'ble Chief Election Commissioner conducted a meeting with political parties in Chennai regarding poll preparedness for GELS, 2024 and sought opinions about conduct of Elections in free and fair manner.

The Hindu (Tamil)

Dated: 24.02.2024

## தலைமை தேர்தல் ஆணையர் தலைமையில் ஆலோசனை

# ஒரே கட்டமாக தேர்தல் நடத்த வேண்டும்

- தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தினர். விவிபாட் இயந்திரத்தை வைப்பது குறித்தும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

● சென்னை

தமிழகத்தில் மக்களவை தேர்தலை ஒரே கட்டமாக நடத்த வேண்டும் என்று தலைமை தேர்தல் ஆணையரிடம் அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தினர். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் - கட்டுப்பாட்டு இயந்திரம் ஆகியவற்றுக்கு இடையே, விவிபாட் இயந்திரத்தை வைக்க கூடாது என்று திமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள் வலியுறுத்தின.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய, இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில், தேர்தல் ஆணையர் அருண் கோயல், மூத்த துணை தேர்தல் ஆணையர்கள் தர்மேந்திர சர்மா, நிதேஷ் வியாஸ், துணை தேர்தல் ஆணையர்கள் அஜய் பதூ, மனோஜ்குமார் சாஹு, ஊடகப் பிரிவு தலைமை இயக்குநர் பி.நாராயணன், தலைமை இணை இயக்குநர் அனுஜ் சந்தக், முதன்மை செயலர் மல்லே மாலிக் ஆகியோர் நேற்று முன்தினம் இரவு சென்னை வந்தனர்.

மீனம்பாக்கத்தில் உள்ள ஓட்டலில் நேற்று காலை நடந்த ஆலோசனை கூட்டத்தில், தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய, மாநில கட்சிகளின் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்தனர். பிற்பகலில், தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்களிடம் கேட்டறிந்தனர். பல்வேறு அறிவுறுத்தல்களையும் வழங்கினர். தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு மற்றும் கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர் உடன் இருந்தனர்.


நலம் வாழ

உள்ளே...





மக்களவை தேர்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில் சென்னையில் நேற்று நடந்தது. தேர்தல் ஆணையர் அருண் கோயல், துணை ஆணையர் தர்மேந்திர சர்மா, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: எம்.முத்துகணேஷ்

தமிழகத்தில் உள்ள 10 அங்கீகரிக்கப்பட்ட தேசிய, மாநில கட்சிகளுக்கு தனித்தனியாக நேரம் ஒதுக்கி, அவர்களது கருத்துகளை கேட்டறிந்தனர்.

மக்களவை தேர்தலை தமிழகத்தில் ஒரே கட்டமாக நடத்த வேண்டும் என்று பெரும்பாலும் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் கட்சிகளின் பிரதிநிதிகள் கூறியதாவது:

ஆர்.எஸ்.பாரதி (திமுக): கடந்த தேர்தல்போல இல்லாமல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கட்டுப்பாட்டு இயந்திரம் இடையே விவிபாட் இயந்திரம் வைக்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளனர். இது சட்டத்துக்கு புறம்பானது. பொதுமக்கள் அளிக்கும் வாக்கு நேரடியாக கட்டுப்பாட்டு இயந்திரத்துக்கு செல்வதுதான் நம்பகத்தன்மையை உருவாக்கும். இடையில் விவிபாட் இயந்திரத்தை வைப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இந்த நடைமுறையால் 2 சதவீதம் வரை தவறு நடக்க வாய்ப்பு உள்ளதாக ஆணையர்களே ஒப்புக் கொள்கின்றனர். எனவே, இதை மாற்றியமைக்க வேண்டும்.

முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் (அதிமுக): வாக்காளர் பட்டியலில் முரண்பாடுகளை முழுமையாக களைய வேண்டும். ஒரே குடும்பத்தினர் பல வாக்குச்சாவடிகளில் வாக்களிக்கும் நிலை உள்ளதை மாற்ற வேண்டும். பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்டறிந்து, கூடுதல் துணை ராணுவப் படை, சிசிடிவி கேமரா பயன்படுத்தி சுதந்திரமாக தேர்தல் நடத்த வேண்டும். உள்ளூர் காவல் துறை ஆளுங்கட்சிக்கு சாதகமாக உள்ளதால், துணை ராணுவத்தினரை அதிகம் நியமிக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் தேர்தலுக்கு முன்பு ஆட்சியர்கள், எஸ்.பி.க்கள் முதல் கீழ்நிலை வரை அதிகாரிகளை மாற்ற வேண்டும்.

கராத்தே தியாகராஜன் (பாஜக): மாநிலதலைவர் அண்ணாமலை சார்பில், கடிதம் அளித்துள்ளோம். தமிழகத்தில் உள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளும் முக்கியமானதாக இருப்பதால், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். வாக்குச்சாவடி, வாக்கு எண்ணிக்கை மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும். போதிய அளவில் துணை ராணுவப் படையினரை நியமிக்க வேண்டும். ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்படும் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்க வேண்டும்.

காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு தலைவர் சந்திரமோகன்: வாக்களிப்போருக்கு 100 சதவீதம் ஒப்புகைச் சீட்டு வழங்கவேண்டும். ஆணையம் வழங்கும் வாக்காளர் அடையாள அட்டையுடன் வாக்களிக்க சென்றால், பட்டியலில் பெயர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மத்திய குழு உறுப்பினர் பி.சம்பத்: மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பாக மக்களுக்கு சந்தேகம் இருப்பதால், முதலில் மின்னணு இயந்திரம், அடுத்து கட்டுப்பாட்டு இயந்திரம், தொடர்ந்து விவிபாட் இயந்திரத்தை வைக்குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன்: பதற்றமான சூழல் உள்ள இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகளில் பிரச்சாரம் செய்வது, சாதி, மத, இன உணர்வுகளை தூண்டுவது ஆகியவற்றை தடுக்க வேண்டும்.

தேமுதிக துணைசெயலாளர் பார்த்தசாரதி: வாக்காளர் அடையாள அட்டையில் ஆதார் எண்ணை இணைக்கும் பணியை விரைவில் முடிக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தலைமை தேர்தல் ஆணையர் உள்ளிட்டோர் இன்று காலை தமிழகம், கர்நாடகா, கேரளாவின் தலைமை தேர்தல் அதிகாரிகள், காவல் அதிகாரிகளிடம் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து கேட்டறிகின்றனர். தொடர்ந்து, தமிழக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, டிஜிபி சங்கர் ஜிவால் உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

During the visit of Hon'ble ECI regarding poll preparedness, the political parties requested to conduct General Election in single phase and also regarding the placement of VVPAT machine.

The Hindu (Tamil)

Dated: 24.02.2024

### ஆந்திரா, ஒடிசா பேரவை தேர்தலையும் சேர்த்து

# மார்ச் 13-ம் தேதிக்கு பிறகு மக்களவை தேர்தல் தேதி அறிவிப்பு?

● புதுடெல்லி

நாடாளுமன்ற மக்களவையின் பதவிக் காலம் வரும் மே மாதத்துடன் முடிவடைய உள்ளது. இதைத் தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் மக்களவைத் தேர்தலை நடத்த தலைமை தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன் ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட சில மாநில சட்டப் பேரவைகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து இறுதிகட்ட ஆய்வு செய்வதற்காக தேர்தல் ஆணைய அதிகாரிகள் குழு பல்வேறு மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறது.

வரும் மார்ச் 8 அல்லது 9-ம் தேதி ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு நிலவரம் மற்றும் தேர்தல் பணிக்கு தேவையான துணை ராணுவப் படைகள் குறித்து மத்திய அரசின் உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணைய அதிகாரிகள் குழு ஆலோசனை நடத்த உள்ளது.

அத்துடன், மார்ச் 12, 13-ம் தேதிகளில் ஜம்மு - காஷ்மீர் செல்லும் இக்குழுவினர், மக்களவைத் தேர்தலுடன் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கும் தேர்தல் நடத்தலாமா என்பது குறித்து கள ஆய்வுகளை நடத்த உள்ளனர்.

எனவே, வரும் மார்ச் 13-ம் தேதிக்குப் பிறகு மக்களவை பொதுத் தேர்தல் குறித்த அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2019-ம் ஆண்டு மார்ச் 10-ம் தேதி மக்களவை பொதுத் தேர்தல் தொடர்பான அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதன்படி, அந்த ஆண்டு ஏப்ரல் 11 முதல் மே 19 வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் மே 23-ம் தேதி வெளியானது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு சுமார் 97 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் மக்களவைத் தேர்தலுடன் இணைந்து ஆந்திரா, அருணாச்சல பிரதேசம், ஒடிசா, சிக்கிம் மாநிலங்களுக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது.

Lok Sabha Election date announcement after March, 13 including Andhra pradesh and Odisha Assembly Election

The Hindu (Tamil)

Dated: 24.02.2024

### வாக்குப்பதிவு இயந்திரத்துடன் விவிபேட் கருவி இணைக்க கோரி

# விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

● சென்னை

அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் விவிபேட் கருவியை இணைக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் விசிக சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஈடுபட்ட விசிகவினர், தேர்தல் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களுடனும் விவிபேட் கருவியை இணைக்க வேண்டும்; இல்லாவிட்டால் வாக்குச்சீட்டு முறைக்கு மாற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முழக்கம் எழுப்பினர்.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விசிக தலைவர் திருமாவளவன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் பேசியதாவது:

விசிக தலைவர் திருமாவளவன்: மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைத் தவறாகப் பயன்படுத்திமோசடிகள்செய்து, மீண்டும் ஆட்சிக்கு வர பாஜக துடிக்கிறது. கடந்த 2019-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது, வாக்குப்பதிவு இயந்திரத்தில் மோசடி செய்துதான் பாஜக ஆட்சிக்கு வந்ததாகத் தரவுகளோடு வல்லுநர்கள் கூறி வருகின்றனர். வட இந்திய மாநிலங்களில் ஒருபுறம் விவசாயிகள் போராட்டம் தீவிரமடையும் நிலையில், மற்றொரு புறம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (இவிஎம்) வேண்டாம் என வலியுறுத்தி போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

பிரதமர் மோடியை இவிஎம் பிரதமர் என்றே அவர்கள் அழைக்கின்றனர். இண்டியா கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில், வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் விவிபேட் கருவியை இணைக்க வேண்டும் எனவும், ஒப்புகைச் சீட்டை எண்ணிய பிறகே தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இந்த தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தும் வகையில் விசிக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல்தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன்:

வெற்றிக்காக பாஜக எதையும் செய்யும். எனவே, மக்களைத் திரட்டி பாஜகவை முறியடிப்போம். அதற்கு பாதகமாக இவிஎம் இயந்திரங்கள் இருக்கக் கூடாது. தென் மாநிலங்களில் பாஜக வெற்றி பெறாது. வடமாநிலங்களிலும் பாஜகவை வீழ்த்துவோம்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன்: இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் வாக்குச்சீட்டு முறைக்கு திரும்ப வேண்டும் என்கின்றன. இதை ஏற்பதற்கு என்ன தடை? நிலை இப்படியே இருக்காது. இதற்கு போராட்டங்கள் அவசியம்.

இவ்வாறு அவர்கள் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில், விசிக துணை பொதுச்செயலாளர்கள் எஸ்.எஸ். பாலாஜி, ஆளூர் ஷாநவாஸ், தமிழினியன், ஆதவ் அர்ஜுனா, தலைமை நிலையச் செயலாளர் பாலசிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் திருமாவளவன் கூறும்போது, "ஜாதிவாரி கணக்கெடுப்பு குறித்து தமிழக அரசு மாறுபட்ட கருத்தில் இருப்பது போன்ற தோற்றத்தை பாமக உருவாக்க முயல்கிறது. இது தேர்தல் அரசியலுக்கான யுக்தி. தொகுதிப் பங்கீடு தொடர்பாக அடுத்தகட்ட பேச்சுவார்த்தையில் அனைத்தையும் சுமுகமான முறையில் முடிவு செய்வோம். திமுக கூட்டணியில் சலசலப்பு இல்லை" என்றார்.

Viduthalai Seruthaigal Katchi protest regarding to connect VVPAT with voting Machine

Dinamalar, Dated: 24.02.2024


# ஒரே நாள் தேர்தல்

## ● தமிழக கட்சிகள் ஒருமித்த கோரிக்கை...
## ● தலைமை தேர்தல் கமிஷனரிடம் மனு

சென்னை, பிப். 24-

**'தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்த வேண்டும்; போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்' என, தேர்தல் கமிஷனிடம் தமிழக கட்சிகள் ஒருமித்த கோரிக்கை வைத்தன.**

இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார், தேர்தல் கமிஷனர் அருண் கோயல் மற்றும் துணை தேர்தல் கமிஷனர்கள் அடங்கிய குழுவினர் சென்னை வந்தனர். இவர்கள், அங்கீகரிக்கப்பட்ட தமிழக கட்சிகளின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்தனர்.



லோக்சபா தேர்தலுக்கான ஆயத்த பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் பங்கேற்ற தலைமை தேர்தல் ஆணையர் ராஜிவ்குமார் மற்றும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ. இடம்:- மீனம்பாக்கம், சென்னை.

ஒவ்வொரு கட்சியின் பிரதிநிதிகளும், ஆணையர்களை தனியே சந்தித்து பேசி, கோரிக்கை மனு அளித்தனர்.

தமிழகத்தில் தேர்தலை ஒரே கட்டமாக நடத்த வேண்டும் என்பதில் எல்லா கட்சிகளும் ஒற்றுமையை வெளிப்படுத்தின. மற்ற யோசனைகள் குறித்து, கூட்டம் முடிந்த பின் கட்சி பிரதிநிதிகள் பேட்டி அளித்தனர்.

**தி.மு.க.,வின் ஆர்.எஸ். பாரதி:** பொதுமக்கள் அளிக்கும் ஓட்டு நேரடியாக கட்டுப்பாட்டு யூனிட்டுக்கு போவது தான் நம்பிக்கை தரும்.

ஓட்டுப்பதிவு இயந்திரத்துக்கும், கட்டுப்பாடு யூனிட்டுக்கும் நடுவே ஒரு 'விவிபேட்' வைத்து ஓட்டு எண்ணுவது தவறானது. இந்த முறையில் பதிவான ஓட்டுகளை, 100 சதவீதம் எண்ண முடியாது என்பதால் சந்தேகம் ஏற்படுகிறது.

இந்த முறையில் எண்ணும்போது, 2 சதவீதம் வரை தவறு நடக்க வாய்ப்பிருக்கிறது என தேர்தல் கமிஷனே ஒப்புக் கொள்கிறது. இது, முடிவையே பாதிக்கும். எனவே, இந்த ஏற்பாடை மாற்றியமைக்க வேண்டும் என கேட்டோம். தேர்தல் கமிஷன் திருப்திகரமான பதில் எதையும் சொல்லவில்லை.

இங்கே கொடுக்கும் புகார் மீது முடிவு எடுக்க, டில்லியில் உள்ள தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும் என்ற நிலையை மாற்றி; மாநில தலைமை தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் தர வேண்டும் என்பது உள்ளிட்ட யோசனைகள் அடங்கிய 15 பக்க மனுவை தேர்தல் கமிஷனிடம் கொடுத்துள்ளோம்.

**அ.தி.மு.க.,வின் ஜெயகுமார்:** வாக்காளர் பட்டியலில் உள்ள முரண்பாடுகளை களைய வேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள், பல ஓட்டுச் சாவடிகளில் ஓட்டு போடும் நிலையை மாற்ற வேண்டும்.

பதற்றமான ஓட்டுச் சாவடிகளை கண்டறிந்து, அங்கு துணை ராணுவ வீரர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும். ஓட்டுச் சாவடிகளில் குடிநீர் ஏற்பாடு செய்ய வேண்டும்; துணி பந்தல் போட வேண்டும் என கேட்டிருக்கிறோம்.

**காங்கிரஸ் சந்திரமோகன்:** ஓட்டுப்பதிவு இயந்திரத்தில் ஓட்டளிக்கும்போது, 100 சதவீதம் ஒப்புகை சீட்டு வேண்டும். தேர்தல் கமிஷன் தான் வாக்காளர் அடையாள அட்டை வழங்குகிறது.

எனவே, வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தாலும், இல்லாவிட்டாலும், வாக்காளர் அடையாள அட்டையை காட்டினால் ஓட்டளிக்க அனுமதிக்க வேண்டும். தேர்தல் முடிந்ததும், முடிவை தெரிந்து

தொடர்ச்சி 13ம் பக்கம்

## ஒரே நாள் தேர்தல்

கொள்ள நீண்ட நாட்கள் மக்களை காத்திருக்க வைப்பது சரியல்ல. தேர்தல் பணியில் ஈடுபடும் பெண்களுக்கு கழிப்பறை உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

**தே.மு.தி.க.,வின் பார்த்தசாரதி:** வாக்காளர் பட்டியலில் ஆதார் நம்பரை இணைக்க வேண்டும். ஆதார் கார்டுக்கு கைரேகை வைப்பதுபோல், வாக்காளர் அடையாள அட்டையுடன், கைரேகை பதிவு செய்யும் முறையை கொண்டு வர வேண்டும். கள்ள ஓட்டு போடுவதை தடுக்க' வேண்டும் என கூறினோம்.

**பா.ஜ.,வின் கராத்தே தியாகராஜன்:** ஓட்டுச்சாவடிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும். கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும். நட்சத்திர பேச்சாளர்களுக்கு விரைவில் அனுமதி வழங்க வேண்டும். உயர் போலீஸ் அதிகாரிகள், ஆளுங்கட்சிக்கு சாதகமாக இருந்தால், தகுந்த அறிவுரை வழங்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

**இந்திய கம்யூனிஸ்ட் வீரபாண்டியன்:** பதற்றமான இடங்களில் பாதுகாப்பை அதிகப்படுத்த வேண்டும். டாக்டர்கள் தபால் ஓட்டளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' முறையை எதிர்க்கிறோம்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சம்பத்:** மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஓட்டுப்பதிவு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும். நடுநிலையான அதிகாரிகளை பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும்; பண பலத்தை தடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதிநிதிகள் கூறினர்.

ஆம் ஆத்மி ஜோசப் ராஜா, பகுஜன் சமாஜ் சத்தியமூர்த்தி, தேசிய மக்கள் கட்சி சீனிவாசன் உள்ளிட்ட மற்ற பிரதிநிதிகளும், 'தேர்தலை ஒரே கட்டமாக நடத்த வேண்டும்; ஓட்டு போட்டதும் வாக்காளர்களின் மொபைல் போன் எண்ணிற்கு, எஸ்.எம்.எஸ்., வரும் முறையை அமல்படுத்த வேண்டும்' என வலியுறுத்தினர்.

The political parties requested ~~Hon'ble~~ CEC to conduct General Election in single phase in Tamil Nadu.